**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**முன்னிலை : திருமதி. ஆர்.எல். பிரியதர்ஷினி, பி.ஏ., பி.எல்.,**

**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**திருநெல்வேலி**

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ம் நாள் திங்கள்கிழமை

**<u>அ.வ.எண்.333/2025</u>**
**(CNR No.TNTL06-000442-2025)**

திருமதி.லதாபாய் ... வாதி

//எதிர்//

1) S.ரெத்னா பாய்
2) செல்வின் லீலாபாய்
3) செல்வின் ஜீவராஜ்
4) வட்டாட்சியர்
பாளையங்கோட்டை
5) தமிழக அரசு அதன்
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி

... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 15.09.2025 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 25.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.ஜாகீர்உசேன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.நாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.R.சங்கர் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், வழக்கு ஆவணங்களையும் ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது, வாதியின் ஆவணப்பெயரான லதாபாய் என்ற நபரும் உயிலில் கண்ட வாதியின் பெயராக காட்டியுள்ள செல்வின் லதாபாய் என்ற நபரும் ஒரு நபரே என விளம்புகை பரிகாரம் வழங்கும் படியும் மற்றும் வாதியின் ஆவணப் பெயரான லதாபாய் என்ற நபரும் உயிலில் கண்ட செல்வின் லதாபாய் என்ற நபரும் ஒரு நபரே என 4ம் பிரதிவாதி சான்று வழங்கிட செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும் படியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:-**

2.1) வாதியின் தாயார் 1ம் பிரதிவாதி ஆவார். 2, 3 பிரதிவாதிகள் வாதியின் உடன்பிறந்தவர்கள் ஆவார்கள். வாதியின் தந்தை செல்வமணி தபசில் சொத்தை பொறுத்து 28.03.2012ம் தேதியிட்ட ஒரு பதிவுபெற்ற உயில் தஸ்தாவேஜ் எழுதி வைத்துள்ளார். மேற்படி உயிலின் ஷரத்துபடி வாதிக்கு பிராது 2 வது தபசில் சொத்து எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தது. வாதியின் தந்தை செல்வமணி 23.06.2023ம் தேதியில் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு காலம் சென்றுவிட்டார்.

2.2) மேற்படி உயில் தஸ்தாவேஜ் ஆவணம் அமலுக்கு வந்து அதனடிப்படையில் பிராது 1ம் தபசில் சொத்தை 2ம் பிரதிவாதி பெயரிலும் பிராது 2ம் தபசில் சொத்தை வாதி பெயரிலும் வருவாய் துறையில் பெயர் மாற்றம், சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய ஆவணங்களை பார்வையிட்டபோது உயிலில் லதாபாய் என்று குறிப்பிடுவதற்கு பதிலாக செல்வின் லதாபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவந்தது.

2.3) வாதியின் பெயர் அனைத்து ஆவணங்களிலும் லதாபாய் என்று உள்ளது செல்வமணி உயிலை எழுதும் போது லதாபாய் என்று எழுதுவதற்கு பதிலாக செல்வின் லதாபாய் என்று எழுதிவிட்டார். இதனால் திருநெல்வேலி வட்டாட்சியரிடம் லதாபாய் என்ற பெயர் கொண்ட வரும் செல்வின் லதாபாய் என்ற நபரும் ஒரே நபர்தான் என்று சான்றிதழ் கேட்ட போது வட்டாட்சியர் ஒரே நபர் என்ற சான்றிதழ் வழங்க இயலாது என்றும் எழுத்துப்பூர்வமாக கேட்டதற்கு வட்டாட்சியர் ஒரே நபர் சான்று கொடுப்பதற்கு மார்க்கமில்லை என்று கூறிவிட்டார்.

2.4)எனவே, வாதி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கு வட்டாட்சியர் ஒரு நபர் சான்று வழங்க உத்தரவிடக் கேட்டு பதிவு தபால் மூலம் கடந்த 20.08.2025–ல் மனு கொடுத்தும் அந்த மனுவினை மாவட்ட ஆட்சியர் 21.08.2025 பெற்றுக் கொண்டு நாளது தேதிவரை எந்த பதிலும் அளிக்கவில்லை. எனவே வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3) 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்**

வாதியின் பெயர் அனைத்து ஆவணங்களிலும் லதாபாய் என்றே உள்ளது. ஆனால் உயிலில் லதாபாய் என்று குறிப்பிடுவதற்கு பதிலாக செல்வின் லதாபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் ஆவணப் பெயரான லதாபாய் என்பவரும் உயிலில் காட்டப்பட்டுள்ள செல்வின் லதாபாய் என்பவரும் ஒரே நபர் தான் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>4) 4ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 5ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதி உயிலில் செல்வின் என்று தனது பெயருக்கு முன்னால் சேர்க்கப்பட்டதை அறிந்து திருநெல்வேலி வட்டாட்சியரிடம் லதாபாய் என் பெயர் கொண்ட வரும், செல்வின் லதாபாய் என்ற நபரும் ஒரே நபர்தான் என்று சான்றிதழ் கேட்டபோது வட்டாட்சியர் ஒரே நபர் என்ற சான்றிதழ் வழங்க இயலாது என்று தெரிவித்து விட்டார் என்பதும், எழுத்துப்பூர்வமாக கேட்டதற்கு வட்டாட்சியர் கொடுப்பதற்கு மார்க்கமில்லை என்று கூறிவிட்டார் என்பதும், வாதி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கு வட்டாட்சியர் ஒரு நபர் சான்று வழங்க உத்தரவிடக்கேட்டு பதிவு தபால் மூலம் 20.08.2025–ல் மனு அனுப்பியும், மேற்படி மனுவினை மாவட்ட ஆட்சியர் 21.08.2025–ல் பெற்றுக்கொண்டபோதும் நாளது தேதி வரை எந்த பதிலும் இல்லை என்பதும் சரியல்ல என மறுக்கப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் தமிழ்நாடு அரசு தரப்பினராக சேர்க்கப்படவில்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் 23.07.2024 அன்று WP (MD) No.16476/2024 என்ற வழக்கில் வட்டாட்சியருக்கு இரு நபரும் ஒரே நபர் என சான்று வழங்கும் அதிகாரம் இல்லை என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கு சட்டப்படி நிலைக்ககூடியதல்ல.

**5) இவ்வழக்கில் 04.02.2026 அன்று பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது**

1) லதாபாய் என்பவரும் செல்வின் லதாபாய் என்பவரும் வாதி ஒருவரே என்பதாக வாதி நிரூபித்துள்ளாரா?

2) வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

3) வாதி கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

4) வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் என்ன?

6) வாதி தரப்பில் வாதி லதாபாய் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர்மூலம் வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் செல்வின் லீலாபாய் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர்மூலம் எந்தவொரு சாட்சியமோ, சான்றவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**7) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டது.**

8) வாதியின் தந்தை செல்வமணி என்பவர் பிராது தபசில் சொத்தை பொறுத்து 28.03.2012 ம் தேதியிட்ட ஒரு பதிவு பெற்ற உயில் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அந்த உயிலில் பிராது 2 ம் தபசில் சொத்து வாதிக்கு கொடுக்கப்பட்டிருந்தது என்றும் இந்நிலையில் வாதியின் தந்தை செல்வமணி 23.06.2023 அன்று தனது மனைவியான 1 ம் பிரதிவாதியையும் மக்களான வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகளையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்தார் என்றும் பிராது 2 ம் தபசில் சொத்தை வாதியின் பெயருக்கு வருவாய் துறையில் பெயர் மாற்றம் செய்ய வாதி நடவடிக்கை எடுத்தார் என்றும் ஆனால் உயிலில் வாதியின் பெயர் லதாபாய் என்று குறிப்பிடுவதற்கு பதிலாக செல்வின் லதாபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று வாதியின் பெயர் அனைத்து ஆவணங்களிலும் லதாபாய் என்று உள்ள நிலையில் வாதியின் பெயருக்கு முன்னால் செல்வின் லதாயாய் என்று எழுதப்பட்டுள்ளது என்றும் எனவே

வாதி திருநெல்வேலி வட்டாட்சியரிடம் லதாபாய் என்ற பெயருடையவரும் செல்வின் லதாபாய் என்ற நபரும் ஒரே நபர் என்று சான்று வழங்க கேட்டபோது வட்டாட்சியர் ஒரே நபர் என்ற சான்றிதழ் வழங்க இயலாது என்று கூறிவிட்டார் என்றும் எனவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும் வாதி தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

9) 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதி கோரிய பரிகாரத்தை வாதிக்கு வழங்குவதில் எந்தவித ஆட்சேபனை இல்லை என்று கூறினார். 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் வட்டாட்சியருக்கு இரு நபரும் ஒரே நபர் என சான்று வழங்க அதிகாரம் இல்லை என்று வாதிட்டார்.

**<u>10) எழுவினா 1 மற்றும் 2 க்கான பரிசீலனையும் தீர்வும்</u>**

1) லதாபாய் என்பவரும் செல்வின் லதாபாய் என்பவரும் வாதி ஒருவரே என்பதாக வாதி நிரூபித்துள்ளாரா?

2) வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

10.1) வாதி தனது வழக்கை நிரூபிக்கும் விதமாக வா.சா1 ஆக தன்னை விசாரித்துக்கொண்டு தனது பெயர் லதாபாய் என்றும் ஆனால் அவரது தந்தை செல்வமணி 28.03.2012 ம் தேதியில் ஏற்படுத்திய பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தில் வாதியின் பெயர் செல்வின் லதாபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வாதியின் இதர ஆவணங்களில் லதாபாய் என்று மட்டுமே உள்ளது என்றும் எனவே லதாபாய் என்பவரும் செல்வின் லதாபாய் என்பவரும் வாதி ஒருவரே என்று தனது வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்தார்.

10.2) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ 1 வாதியின் ஆதார் அட்டையை பரிசீலனை செய்தபோது அதில் வாதியின் கணவர் பெயர் விஜயகுமார் என்றும் அவரது முகவரியாக 641A, தெற்கு தெரு தியாகராஜ நகர் VTC பாளையங்கோட்டை, திருநெல்வேலி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ 2 ஆவணமானது காலம் சென்ற வாதியின் தந்தை செல்வமணி என்பவரின் வாரிசு சான்றிதழ் என்பது தெரியவருகிறது. அதில் 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் வாதியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ 2 வாரிசு சான்றிதழில் வாதியின் பெயர் லதா பாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

10.3) வா.சா.ஆ 3 ஆவணமானது 28.03.2012 ம் தேதியில் வாதியின் தகப்பனார் செல்வமணி என்பவர் ஏற்படுத்திய உயில் ஆவணம் என்பது தெரியவருகிறது. அதில் வாதியின் பெயர் செல்வின் லதாபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ 4 ஆவணமானது வாதி திருநெல்வேலி வட்டாட்சியருக்கு ஒரு நபர் சான்றிதழ் வழங்க கோரி அளித்த விண்ணப்பம் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ 5 ஆவணமானது மாவட்ட ஆட்சியருக்கு ஒரு நபர் சான்றிதழ் வழங்க கோரி அளித்த விண்ணப்பம் என்பது தெரியவருகிறது.

10.4) வா.சா.ஆ 6 ஆவணமானது மாவட்ட ஆட்சியர் வாதியின் விண்ணப்பத்தை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ 7 ஆவணமானது வாதியின் பான் கார்டு நகல் என்பது தெரியவருகிறது. அதில் வாதியின் பெயர் லதாபாய் என்றும் அதில் தந்தையின் பெயர் செல்வமணி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. வா.சா.ஆ 8 ஆவணமானது வாதியின் வாக்காளர்

அடையாள அட்டை என்பதும் அதில் வாதியின் கணவர் பெயர் விஜயகுமார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது.

10.5) வாதியின் பெயர் வா.சா.ஆ 3 உயில் ஆவணத்தில் மட்டுமே செல்வின் லதாபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக வாதி தரப்பில் கூறப்பட்டது. பி.வா.சா.1 ஐ 4, 5 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்தபோது " வழக்கின் வாதி எனது உடன் பிறந்த சகோதரி. உயில் ஆவணத்தை தவிர வேறு ஆவணங்களில் வாதியின் பெயர் லதாபாய் என்று உள்ளது என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் நானும் பயனாளி என்றால் சரிதான். " என்று சாட்சியமளித்துள்ளார். வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது " எனது சகோதரியின் பெயர் லதாபாய் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் வாதியின் பெயர் செல்வின் லதாபாய் என்று எங்களது குடும்ப பெயருடன் சேர்த்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ 3 உயிலிலுள்ள செல்வின் லதாபாயும் வாதியும் ஒரே நபர் தான் என்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்." பி.வா.சா.1 ன் மேற்படி சாட்சியத்திலிருந்து வாதியின் குடும்ப பெயர் செல்வின் என்பது தெரியவருகிறது.

10.6) வா.சா.ஆ 2 ஆவணத்தில் வாரிசு சான்றிதழில் செல்வமணி என்பவரின் வாரிசாக வாதி மற்றும் பிரதிவாதிகள் பெயர்கள் அவர்களது குடும்ப பெயருடன் சேர்த்து உள்ளது. வாதியின் சகோதரன் பெயர் செல்வின் ஜீவராஜ் என்றும் சகோதரியின் பெயர் செல்வின் லதாபாய் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வாதியின் குடும்பத்தில் உள்ள நபர்களின் பெயரின் முன்பு செல்வின் என்ற பெயர் இருப்பதாக தெரியவருகிறது. எனவே வாதியின் பெயரையும் அவரது தகப்பனார் உயில்

ஆவணத்தில் செல்வின் லதாபாய் என்று குறிப்பிட்டுள்ளார் என்பது நிரூபணமாகிறது. மேற்படி உயில் ஆவணத்தின் மூலம் பயனாளியாக உள்ள வாதியின் சகோதரியையும் வாதியின் தந்தையின் வாரிசுகள் அனைவரையும் தரப்பினர்களாக சேர்த்து தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

10.7) வாதியின் தந்தையின் வாரிசுகள் வாதி கோரிய பரிகாரத்தை வழங்குவதில் ஆட்சேபனை இல்லை என்று கூறியுள்ளார்கள். மேலும் வாதி வா.சா.ஆ 7 மற்றும் வா.சா.ஆ 8 வரையிலான ஆவணங்கள் மற்றும் வா.சா.1 ன் வாய்மொழி சாட்சியத்தின் மூலம் வாதியின் பெயர் லதாபாய் என்றும் வா.சா.ஆ 3 உயில் ஆவணத்தில் மட்டுமே செல்வின் லதா பாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நிரூபித்துள்ளார். எனவே லதாபாய் என்பவரும், செல்வின் லதாபாய் என்பவரும் வாதி ஒருவரே என்று விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் எழுவினா 1, 2 எழுவினாக்களுக்கு தீர்வு காண்கிறது.

**<u>11) எழுவினா 3 க்கான பரிசீலனையும் தீர்வும்</u>**

3) வாதி கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

11.1) வாதி லதாபாய் என்ற பெயரும் செல்வின் லதாபாய் என்ற பெயருடையவரும் ஒரே நபர் என்று கோரி விண்ணப்பித்துள்ளார் என்று வாதி தரப்பில் கூறப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் 23.07.2024 அன்று WP(MD)No 16476/2024 என்ற வழக்கில் வட்டாட்சியருக்கு இரு நபரும் ஒரே நபர் என்று சான்று வழங்கும் அதிகாரம் இல்லை என்று பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டது.

11.2) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் W.P.No.10949/2023 (Santhalakshmi Vs.Tahsildar chetpet) என்ற வழக்கில் பிறப்பித்த உத்தரவை பார்வையிட்டதில் Though the petitioner has made a representation to the first respondent on 15.12.2022 to issue a certificate stating that both the names of 'Shanthi' and 'Santhalakshmi' refer to the same person i.e., the petitioner herein the first respondent/Tahsildar, has no power to issue the certificate. என்று கூறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பின் படி வட்டாட்சியருககு ஒரு நபர் சான்று வழங்கும் அதிகாரம் இல்லை என்பது தெரியவருகிறது. எனவே வாதி இவ்வழக்கில் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக கிடைக்கத்தக்கது என்பதை நிரூபிக்கவில்லை. எனவே வாதி கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>12) எழுவினா 4 க்கான பரிசீலனையும் தீர்வும்</u>**

4) வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் என்ன?

வாதி கோரிய விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று வாதிக்கு ஆதரவாகவும் வாதி கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று வாதிக்கு எதிராகவும் தீர்வு கண்டுள்ள நிலையில் வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் இந்த எழுவினாவிற்கு தீர்வு காண்கிறது.

**<u>13) முடிவாக</u>**

வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு,

i) வாதியின் ஆவணப்பெயரான லதாபாய் என்ற நபரும் வா.சா.ஆ 3 உயிலில் கண்ட வாதியின் பெயராக காட்டியுள்ள செல்வின் லதாபாய் என்ற நபரும் ஒரு நபரே என விளம்புகை பரிகாரம் வழங்கியும்,

ii) வாதி கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

iii) செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06–ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.04.06 17:33:46 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருநெல்வேலி

**1) <u>வாதி தரப்பு சாட்சி:–</u>**

வா.சா.1 – திரு.லதாபாய் (வாதி)

**2) <u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | | வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது.) |
| வா.சா.ஆ.2 | 05.12.2023 | வாரிசு சான்றிதழ் கணிணி நகல் |
| வா.சா.ஆ.3 | 28.03.2012 | உயில் ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.4 | 17.07.2025 | வாதி வட்டாட்சியருக்கு அளித்த மனு |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 20.08.2025 | வாதி மாவட்ட ஆட்சியருக்கு கொடுத்த மனு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | 21.08.2025 | அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் |
| வா.சா.ஆ.7 | | வாதியின் பான் கார்டு நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது.) |
| வா.சா.ஆ.8 | | வாதியின் வாக்காளர் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

3) **<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.04.06 17:33:53 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருநெல்வேலி

2 வது கூடுதல் மாவட்ட
உரிமையியல் நீதிமன்றம்,
திருநெல்வேலி
அ.வ.எண்.333/2025
சீரான / வரைவு – தீர்ப்புரை
06.04.2026